இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
சனிக்கிழமை 22-07-2023

# ED உருவாக்கிய NDA

பிரதமர் நரேந்திர மோடியுடன் கைகோர்த்து நிற்பவர்கள் யார்? யார்? அவர்களது முகம் என்ன என்று பார்ப்போமா? 38 கட்சிகளின் கூட்டணியாம் அது. அந்த 38 கட்சிகளுக்கும் என்ன பலம் என்பதை தேடிப் பாருங்கள்.

*** 24 கட்சிகளுக்கு நாடாளுமன்ற மக்களவையில் ஒரு இடம்கூட இல்லை. அதாவது லோக்சபாவில் ஒரு எம்.பி.கூட இல்லாத கட்சிகள் அவை.**

*** 27 கட்சிகளுக்கு மாநிலங்களவையில் ஒரு இடம்கூட இல்லை. அதாவது ராஜ்யசபாவில் ஒரு எம்.பி.கூட இல்லாத கட்சிகள் இவை.**

*** 9 கட்சிகளுக்குத்தான் மக்களவையில் உறுப்பினர்கள் இருக்கிறார்கள்.**

*** ஒரே ஒரு எம்.பி.யைக் கொண்ட கட்சிகள் - 9**

*** இரண்டு எம்.பி.களைக் கொண்ட கட்சிகள் - 3**

*** 7 கட்சிகளுக்கு எந்த மாநிலத்திலும் ஒரே ஒரு எம்.எல்.ஏ.கூட இல்லை.**

**- இதுதான் பா.ஜ.க. கூட்டி இருக்கும் கட்சிகளின் இலட்சணம் ஆகும்.**

இந்தக் கூட்டத்துக்கு மகாராஷ்டிராவைச் சேர்ந்த ஏக்நாத் ஷிண்டே வந்திருந்தார். இவர், சிவசேனாவை உடைத்துவிட்டு தனியாக தனக்கென சிவசேனா கட்சியை ஆரம்பித்துக் கொண்டவர். பி.ஜே.பி. தயவில் மகாராஷ்டிரா முதலமைச்சராக இருக்கிறார்.

இந்தக் கூட்டத்துக்கு மகாராஷ்டிராவைச் சேர்ந்த அஜித் பவார் வந்திருந்தார். இவர், தேசியவாத காங்கிரஸ் கட்சியை உடைத்துவிட்டு தனியாக ஒரு கோஷ்டி சேர்த்து உள்ளவர். இவர் மகாராஷ்டிரா மாநிலத்தின் இரண்டு துணை முதலமைச்சர்களில் ஒருவராக இருக்கிறார்.

இந்தக் கூட்டத்தில் பீகாரைச் சேர்ந்த ஜித்தன்ராம் மாஞ்சி வந்திருந்தார். இவர் பீகார் முதலமைச்சர் நிதிஷ்குமாரின் கட்சியான ஐக்கிய ஜனதா தளத்தில் இருந்து பிரிந்து சென்றவர். தனிக்கட்சி நடத்தி வருகிறார்.

'லோக் ஜனசக்தி' என்ற கட்சி இரண்டாக உடைந்தது. இப்போது இரண்டு பிரிவும் பா.ஜ.க.வை ஆதரிக்கிறது. இத்தகைய கலவைதான் பா.ஜ.க. கூட்டணி ஆகும். ஒரு எம்.பி., ஒரு எம்.எல்.ஏ. இல்லாத கட்சிகளை விட்டுவிடுவோம். விரல் விட்டு எண்ணக் கூடிய சில கட்சிகள் பா.ஜ.க.வில் மிரட்டல் அரசியலுக்கு பணிந்தவைதான்.

'அண்ணாமலையைப் பற்றி என்னிடம் கேட்காதே' என்று சில நாட்களுக்கு முன்னால் சீறிய பழனிசாமி இப்போது பெட்டிப்பாம்பாக அடங்கி, பா.ஜ.க.விடம் பதுங்கத் தொடங்கி இருக்கிறார். 'நிலக்கரி'யை வைத்து கரி பூசிவிடுவார்கள் என்று பயந்தா?

ஓ.பன்னீர்செல்வத்தை முதலில் மிரட்டியது பா.ஜ.க. பின்னர் பழனிசாமியை மிரட்டியது. இருவரையும் பிரித்தது. பின்னர் சேர்த்தது. இதற்காகவே அப்போது மும்பையில் இருந்து பசை கொண்டு வந்தார் ஆளுநர் வித்யாசாகர் ராவ்.

சசிகலா சொத்துகளை முடக்கினார்கள். டி.டி.வி. தினகரன் மீது வழக்குப் போட்டு முடக்கினார்கள். அன்றைய அமைச்சர் விஜயபாஸ்கர் வீட்டில் ரெய்டு நடத்தினார்கள். பணியாவிட்டால் பன்னீர் அணியை ஆதரித்துவிடுவோம் என்று சொல்லி பழனிசாமியை பணிய வைத்தார்கள். பழனிசாமி மீதான ஊழல் குற்றச்சாட்டை விசாரிக்க சி.பி.ஐ.க்கு சென்னை உயர்நீதி மன்றம் உத்தரவிட்டதும் டெல்லியில் சரணடைந்தார் பழனிசாமி.

சும்மா முறுக்கிக் கொள்வது போல பழனிசாமி காட்டிக் கொள்கிறார். ஆனாலும் பழைய வழக்குகளைக் காட்டி அடக்கி வைத்திருந்தது பா.ஜ.க. 'இதோ அங்கீகாரம் தருகிறோம்' என்று சொல்லி தேர்தல் ஆணைய கடிதத்தைக் காட்டி மிரட்டி, டெல்லிக்கு பழனிசாமியை வரவைத்து விட்டது பா.ஜ.க.

வருமான வரி – அமலாக்கம் – சி.பி.ஐ. – தேர்தல் ஆணையம் ஆகியவை சேர்ந்துதான் அ.தி.மு.க.வை இந்தக் கூட்டணிக்குள் கொண்டு வந்தது.

ஏக்நாத் ஷிண்டேவை உருவாக்கியது யார்? பா.ஜ.க.தான். சிவசேனாவுக்குள் இருந்த அவரைப் பிரித்தது பா.ஜ.க. சிவசேவா அதிருப்தி எம்.எல்.ஏ.க்களை 2022 ஆம் ஆண்டு மகாராஷ்டிரா மாநிலத்தை விட்டு வெளியே அழைத்துச் சென்றது பா.ஜ.க.வைச் சேர்ந்த தொழிலதிபர் மோஹித் கம்போஜ் என்பது அப்போதே வெளியானது. பா.ஜ.க.வின் இளைஞரணித் தலைவர் சஞ்சய் குட்டே, ஷிண்டே கூட்டத்தை குஜராத்துக்கு அழைத்துச் சென்றவர்களில் முக்கியமானவர். எனவே, ஆபரேஷன் தாமரையின் அங்கம் தான் ஷிண்டே கட்சி உருவாக்கமும் என்பதை சொல்லித் தெரிய வேண்டியது இல்லை.

கடந்த 2021, அக்டோபர் 7ஆம் தேதி, மகாராஷ்டிரா மாநிலத்தின் துணை முதல்வராக இருந்த தேசியவாத காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த அஜித் பவார் வீட்டில் வருமான வரித்துறை சோதனை நடத்தியது. அவரது மூன்று சகோதரிகளின் வீட்டிலும் சோதனை நடத்தப்பட்டது. மும்பை, புனே, கோவா, ஜெய்ப்பூர் உள்ளிட்ட நகரங்களில் உள்ள அஜித் பவாருக்குச் சொந்தமான, நெருக்கமானவர்களின் வீடுகள், அலுவலகங்கள் என 70 இடங்களில் வருமான வரித்துறை சோதனை நடத்தியது. சோதனையின் முடிவில், 180 கோடி ரூபாய் அளவுக்கு வருமான வரிக்கணக்கில் காட்டப்படாத கருப்புப்பணம் கண்டறியப்பட்டதாகவும், 2.13 கோடி ரூபாய் மதிப்புள்ள நகைகள், 4.32 கோடி ரூபாய் ரொக்கப்பணம் கைப்பற்றப்பட்டதாகவும் அறிவிக்கப்பட்டது. மேலும், அஜித் பவாருக்கு, அவர் பெயரிலும் அவரது பினாமிகள் பெயரிலுமாக மொத்தம் 1,000 கோடி ரூபாய் அளவுக்கு சொத்து மதிப்பு உள்ளதாக வருமான வரித்துறை செய்தியை கசியவிட்டது. பயந்துவிட்டார் அஜித்பவார். அவர் மீது ரெய்டு நடத்திய பா.ஜ.க. கட்சி, அஜித் பவாருக்கு துணை முதலமைச்சர் பதவியை வழங்கி மகிழ்ந்துள்ளது.

அஜித் பவாருக்குச் சொந்தமான ரூ.65 கோடி மதிப்பிலான சொத்துக்களை முடக்கியது அமலாக்கத்துறை. இப்போது அவர் பா.ஜ.க. கூட்டணி ஆட்சியில் துணை முதலமைச்சராக இருக்கிறார். அதனால்தான் இது அமலாக்கத் துறையால் உருவாக்கப்பட்ட அணி எனப்படுகிறது.

'டெக்கான் க்ரானிக்கல்' நாளேடு எழுதிய தலையங்கத்தில், "எதிர்க்கட்சிகள் கூட்டம் பாட்னாவில் நடக்கும்போது அமைச்சர் செந்தில் பாலாஜி வீட்டில் ரெய்டு நடத்தினார்கள். பெங்களூரில் கூடிய போது அமைச்சர் பொன்முடி வீட்டில் ரெய்டு நடத்தினார்கள். கடந்த கால அ.தி.மு.க. ஆட்சியை இப்படித்தான் வழிக்குக் கொண்டு வந்தார்கள்" என்று எழுதி உள்ளது. அதாவது பா.ஜ.க.வின் பாணியை அம்பலப்படுத்தியது அந்த நாளிதழ்.

**"இவ்வளவு உதவி செய்திருந்தும் பா.ஜ.க.வின் டெல்லி கூட்டத்தில் அமலாக்கத்துறையை அழைக்கவில்லை, நன்றி கெட்டவர்கள்" என்று கிண்டலடித்திருந்தார் எழுத்தாளர் ஆதவன் தீட்சண்யா. இது கிண்டல் அல்ல, உண்மை!**

## மணிப்பூரின் பழங்குடியின பெண்களுக்கு நிகழ்ந்த கொடூரம்!

*இம்பால், ஜூலை 22 -*

*மணிப்பூரில் குக்கி பழங்குடியின பெண்கள் இருவரை, பாலியல் வன்கொடுமை செய்து நிர்வாணமாக்கி இழுத்துச் சென்ற கொடூரம் நாடு முழுவதும் கடும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.*

*இந்நிலையில், இச்சம்பவம் தொடர்பாக உச்சநீதிமன்றம் தாமாக முன்வந்து நேற்று விசாரணை நடத்தியது. மணிப்பூரில் பழங்குடியின பெண்களுக்கு நிகழ்ந்த கொடூரத்திற்கு ஒன்றிய அரசின் அட்டர்னி ஜெனரலிடம் உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி டி.ஒய்.சந்திரசூட் கடும் அதிருப்தியை தெரிவித்தார். ஜனநாயகத்தில் இதுபோன்ற சம்பவங்களை ஏற்கவே முடியாது. இந்த கொடூரச் சம்பவம் மிகவும் கவலையளிக்கிறது. மணிப்பூர் விவகாரத்தில் அரசு நடவடிக்கை எடுக்கத்தவறினால், உச்சநீதிமன்றம் தலையிடும் என்றும் தலைமை நீதிபதி சந்திரசூட் எச்சரித்தார்.*



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (20.7.2023) செங்கல்பட்டு மாவட்டம், குரோம்பேட்டை, மெட்ராஸ் தொழில்நுட்பக் கல்லூரி பவள விழாவில் முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்டு, மாணவர்களுடன் கலந்துரையாடி அங்கு அமைக்கப்பட்டிருந்த கண்காட்சி அரங்குகளைப் பார்வையிட்டார். அவ்வரங்கு ஒன்றில், அதனை முதல்வரிடம் – 'முரசொலி' துணை ஆசிரியர் மு.முத்தையாவின் புதல்வர் – அக்கல்லூரியில் மூன்றாமாண்டு பி.ஈ. பயிலும் மு.கார்த்தி விவரிக்கிறார்.

## மதுரையில் மக்கள் பயன்பாட்டுக்கு வந்த கலைஞர் நூற்றாண்டு நூலகம்:

# ஆயிரக்கணக்கானோர் ஆர்வமுடன் பார்வையிட்டு வியப்பு!

மதுரையின் புதிய அடையாளமாக உருவெடுத்துள்ள கலைஞர் நூற்றாண்டு நூலகத்தை முதல்வர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்துள்ள நிலையில் நேற்று முன்தினம் முதல் பொதுமக்கள் பயன்பாட்டுக்கு அனுமதி அளிக்கப்பட்டது.

அடித்தளம், தரைத்தளம், 6 மாடிகளிலும் புத்தக அரங்குகள் என முழுவதும் குளிரூட்டப்பட்ட வசதியுடன் இந்நூலகம் அமைந்துள்ளது.

மிகுந்த எதிர்பார்ப்பை ஏற்படுத்திய நூலகத்தில் முதல் நாளான நேற்று முன்தினத்தன்றே ஆயிரக்கணக்கானோர் பார்வையிட்டனர். குறிப்பாக குழந்தைகளுக்கென பிரத்யேகமாக விளையாட்டு அரங்குகள் உள்ளன. மாற்றுத்திறனாளிகளுக்கென பிரத்யேக வசதிகள் உள்ளன. நூலகம் முன்புள்ள முத்தமிழறிஞர் கலைஞர் சிலை அருகே நின்று பொதுமக்கள் ஆர்வமுடன் சுய புகைப்படம் (செல்ஃபி) எடுத்துக்கொண்டனர்.



கலைஞர் நூற்றாண்டு நூலக நுழைவாயிலில் உள்ள கலைஞர் சிலை முன் சுய புகைப்படம் எடுத்து மகிழும் குடும்பத்தினர்.




**கலைஞர் நூலகம் பற்றி மக்கள் கூறிய கருத்துகள்!**

**சிறுமி ஷிபானா :** குழந்தைகளுக்கு அனைத்து வகையான புத்தகங்களும் உள்ளன. அறிவியல் விளையாட்டுகள், சிறுவர்களுக்கான நவீன திரையரங்கு, மாதிரி விமானப் பயிற்சி போன்ற டிஜிட்டல் தொழில்நுட்பங்கள் கவர்ந்தன. நான் முதன் முதலில் வந்து நூலகத்தைப் பார்த்தது பற்றி தோழிகளிடம் கூறி அவர்களையும் வந்து படிக்கச் சொல்வேன்.

**சிம்மக்கல் ஆர்.யமுனா:** அறிவை வளர்க்கும் வகையில் லட்சக்கணக்கான புத்தகங்கள் உள்ளன. போட்டித்தேர்வர்கள் அமர்ந்து படிக்க நவீன வசதிகள் உள்ளன. நான் எம்.ஏ. ஆங்கில இலக்கியம் படித்துள்ளேன்.



கலைஞர் நூலகத்தில் உள்ள தொன்மையான பொருட்களின் அருங்காட்சியகத்தை பார்வையிடும் மக்கள்.

**செல்லூர் வி.கார்த்திகா:** எம்.ஏ. தமிழ் இலக்கியம் படித்துள்ளேன். போட்டித் தேர்வுகளுக்குத் தயாராகி வருகிறேன். தமிழில் ஏராளமான புத்தகங்கள் உள்ளன. போட்டித் தேர்வுகளுக்கான புத்தகங்களும் உள்ளன. நூலகத்தைப் பள்ளி, கல்லூரி மாணவர்கள் முழு அளவில் பயன்படுத்த வேண்டும்.

**கடச்சனேந்தல் எம்.பரமசிவம் :** சென்னை அண்ணா நூலகம் போல், மதுரைக்கு கலைஞர் நூலகம் அமைந்துள்ளது. நான் தனியார் நிறுவனத்தில் வேலை பார்த்துக் கொண்டே போட்டித் தேர்வுகளுக்கு தயாராகி வருகிறேன்.

முன்னாள் தலைமைச் செயலர் இறையன்பு எழுதிய நூல்களை ஆர்வமுடன் படித்து வருகிறேன்.

**வடக்கு மாசி வீதி வி.தீபா:** நான் சென்னையில் தங்கியிருந்தபோது அண்ணா நூலகம் போன்று மதுரையில் நூலகம் அமையாதா என எதிர்பார்த்தேன்.

அது தற்போது நிறைவேறியுள்ளது. தமிழக அரசுக்கு நன்றி. நூலகத்தை அனைவரும் பயன்படுத்த வேண்டும்.

**நன்றி : இந்து தமிழ் திசை**

### உச்சநீதிமன்றத் தீர்ப்பின்படி

# காவிரிநீரை தமிழ்நாட்டிற்கு உடனடியாக வழங்க வேண்டும்!

## ஒன்றிய ஜல்சக்தி அமைச்சரிடம் - அமைச்சர் துரைமுருகன் நேரில் வலியுறுத்தல்!

புதுடெல்லி, ஜூலை 22-

தமிழ்நாடு நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன் நேற்று புதுடெல்லியில் ஒன்றிய ஜல் சக்தி அமைச்சர் கஜேந்திர சிங் ஷெகாவத்தைச் சந்தித்து காவிரியிலிருந்து தமிழ்நாட்டுக்கு தர வேண்டிய தண்ணீரை உச்சநீதிமன்ற உத்தரவின் படி தாமதமின்றி வழங்க காவிரி நீர் மேலாண்மை ஆணையத்திற்கு தேவையான அறிவுரைகள் வழங்கி நடவடிக்கை எடுத்திடுமாறு வலியுறுத்தினார்.

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஒன்றிய ஜல் சக்தி அமைச்சர் கஜேந்திர சிங் ஷெகாவத் அவர்களுக்கு, கர்நாடக அரசு உச்சநீதிமன்ற தீர்ப்பின் படி காவிரி நீரினை தமிழ் நாட்டிற்கு அளித்திட, காவிரி நீர் மேலாண்மை ஆணையத்திற்குத் தேவையான அறிவுரைகள் வழங்கக் கோரி, 19.07.2023 அன்று எழுதிய கடிதத்தை, தமிழ் நாடு நீர் வளத் துறை அமைச்சர் துரைமுருகன் அவர்கள் ஒன்றிய ஜல் சக்தி அமைச்சர் கஜேந்திர சிங் ஷெகாவத் அவர்களை நேரில் சந்தித்து கடிதத்தை அளித்து, கர்நாடக அரசு இதுவரை தமிழ்நாட்டிற்கு அளிக்கவேண்டிய காவிரி நீரை அளிக்காததால் தமிழ்நாட்டில் நிலவும் நீர்ப்பற்றாக்குறை பற்றி எடுத்துரைத்தார்.

இத்தகைய கடினமான சூழலில், குறுவை பயிரினை காக்க, கர்நாடக அரசு உடனடியாக காவிரி நீரை திறந்திட வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார்கள். இப்பிரச்சினையில் தலையிட்டு, உச்சநீதிமன்ற தீர்ப்பின் படி மாத வாரியாக நிர்ணயிக்கப்பட்ட நீரினை வழங்குமாறும், நீர் குறைபாட்டை ஈடு செய்யுமாறும், கர்நாடகாவிற்கு காவிரி நீர் மேலாண்மை ஆணையம் உத்தரவிட தேவையான அறிவுரைகளை காவிரி நீர் மேலாண்மை ஆணையத்திற்கு வழங்குமாறும் கேட்டுக்கொண்டார்கள்.

அதற்கு, ஒன்றிய ஜல் சக்தி துறை அமைச்சர் அவர்கள், கர்நாடக அரசு காவிரியில் தமிழ் நாட்டிற்கு தண்ணீர் திறந்துவிடுவதற்கும் மற்றும் நீர் பற்றாக்குறை காலங்களில் சரியான நீர் பங்கீடு செய்வதற்கு தேவையான முறையை செயல்படுத்துவதற்கும் காவிரி மேலாண்மை ஆணையத்திற்கு தேவையான அறிவுரைகளை வழங்குவதாக உறுதியளித்தார்கள்.

இவ்வாறு அரசின் செய்திக் குறிப்பில் கூறப்பட்டுள்ளது.




இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் அவர்கள் தலைமையில் நேற்று முன்தினம் (20.07.2023) சென்னை மெரினா கடற்கரையில் நடைபெற்ற நிகழ்ச்சியில் 7வது ஆசிய ஆடவர் ஹாக்கி சாம்பியன் ஸ்ஷிப்2023, கோப்பையை தமிழ்நாட்டில் உள்ள அனைத்து மாவட்டங்களுக்கும் கொண்டும் செல்லும் வகையில் பாஸ்திபால் (Pass the Ball) நிகழ்ச்சியினை தொடங்கி வைத்தார்.